# தமிழ்நாடு கலைத்திட்ட வடிவமைப்பு 2025

## பரிந்துரைக்கப்பட்ட வரைவுப் பாடத்திட்டம், கற்பித்தல் அணுகுமுறைகள் மற்றும் மதிப்பீட்டு உத்திகள்

## சமூக அறிவியல் - வகுப்புகள் 6 முதல் 8 வரை

### அறிமுகம்

உயர்தொடக்கக் கல்வி நிலையில் சமூக அறிவியல் பாடமானது, வரலாறு, புவியியல், பொருளியல் மற்றும் குடிமையியல் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, அறிவார்ந்த, அக்கறையுள்ள மற்றும் சமூகப் பொறுப்புடைய குடிமக்களாக உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இயற்கை, சமூகம், அரசியல் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்புகளைப் புரிந்துகொள்வதற்கு இப்பாடத்திட்டம் முக்கியத்துவம் அளிக்கிறது. நாட்டின் மக்களாட்சியைப் பாதுகாப்பதில் சமத்துவமான சமூகம், பன்முகத்தன்மை மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய தன்மை ஆகியவற்றின் முக்கியத்துவத்தை மாணவர்கள் புரிந்துகொண்டு அவற்றை மதித்து நடப்பதற்கு வழிகாட்டுவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

2025ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநிலக் கல்விக் கொள்கையின் தொலைநோக்குப் பார்வையுடன் இணைந்த இப்பாடத்திட்டமானது, மனப்பாடம் செய்து கற்றுக் கொள்வதிலிருந்து கருத்தியல் புரிதல், ஆழ்ந்து சிந்தித்தல் மற்றும் சான்றுகளின் அடிப்படையிலான காரண காரிய தொடர்பை அறிதல், தேடித்தேர்ந்து கற்றல் அணுகுமுறையைக் கையாளுகிறது. இன்றைய சமகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில் வகுப்பறை அறிவையும் அன்றாட வாழ்க்கை அனுபவத்தையும் இணைத்து, பல துறைகளைச் சார்ந்த ஒருங்கிணைந்த கற்றலை இப்பாடத்திட்டம் ஊக்குவிக்கிறது. மாணவர்களிடம் அறிவியல் சிந்தனையை வளர்த்து அதன்மூலம் மக்களாட்சி, அரசியலமைப்பு விழுமியங்கள், பன்முகத்தன்மை மற்றும் பாலினச் சமத்துவத்தைப் பாதுகாக்க இப்பாடத்திட்டம் முயற்சிக்கிறது. ஆதாரங்களை அறிவியல்பூர்வமாக ஆராய்வது, பகுத்தறிவுடன் சிந்திப்பது மற்றும் நடைமுறை வாழ்க்கையோடு இணைந்து செயல்படுவது ஆகியவற்றின் மூலம் மாணவர்கள் 21ஆம் நூற்றாண்டின் இன்றியமையாத திறன்களைப் பெறுகின்றனர்.

சமூக நீதி, உள்ளூர் மரபு, பண்பாட்டு பன்முகத்தன்மை மற்றும் உலக நாடுகள் ஒன்றையொன்று சார்ந்திருத்தல் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளும் திறனை வளர்ப்பதன் மூலம், சமூக அறிவியலானது மாணவர்களை அறிவுமிக்கவர்களாகவும், பிறர் உணர்வுகளைப் புரிந்துகொள்பவர்களாகவும், சமூகப் பொறுப்புணர்வு கொண்டவர்களாகவும், அனைவரையும் உள்ளடக்கிய மற்றும் நிலையான எதிர்காலத்தை உருவாக்குவதில் பொறுப்புடன் செயல்படுபவர்களாகவும் இருப்பதை உறுதி செய்கிறது.

TNSCERT DRAFT SYLLABUS

## வரலாறு

**கருப்பொருள்: தொடக்ககால நாகரிகங்களிலிருந்து நவீனக் குடியுரிமை வரை: காலப் பயணத்தில் இந்தியாவையும் தமிழ்நாட்டையும் அறிதல்**

**CG 1 : வரலாற்று ஆதாரங்களை ஆராய்ந்து, கடந்தகால நிகழ்வுகளைப் புரிந்துகொள்வதன் மூலம், இன்றைய சமூக, அரசியல் மற்றும் பொருளாதார நிலைமைகளைப் புரிந்துகொள்ளுதல். சமூகத்தின் வளர்ச்சியையும், மாற்றங்களையும், தமிழ்நாட்டின் பண்பாட்டுப் பாரம்பரியத்தையும் புரிந்துகொள்ளச் செய்வதன் மூலம் மாணவர்களின் திறனாய்வுச் சிந்தனையை வளர்த்தல்.**

| **திறன்கள்** | **பாடப்பொருள்** | | |
|---|---|---|---|
| | **வகுப்பு 6** | **வகுப்பு 7** | **வகுப்பு 8** |
| C.1.1 வரலாற்றின் பல்வேறு ஆதாரங்களை அடையாளம் கண்டு, காலவரிசை, வரைபடங்கள் மற்றும் அடிப்படை வரலாற்றுச் சான்றுகளின் உதவியுடன் தொடக்ககால வாழ்க்கை முறையை விளக்குதல்.<br>C.1.2 தொல்லியல் சான்றுகள், இலக்கியங்கள் மற்றும் பயணக் குறிப்புகளை ஆராய்ந்து, அந்தக் காலத்தின் சமூக, பண்பாட்டு மற்றும் அரசியல் நிலைமைகளை ஆய்வு செய்தல்.<br>C.1.3 ஆவணக் காப்பகப் பதிவுகள், காலனிய ஆவணங்கள், நாட்குறிப்புகள் மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களை ஆராய்ந்து, 18ஆம் நூற்றாண்டு முதல் ஏற்பட்ட அரசியல், சமூகப் பொருளாதார மாற்றங்களைப் பகுப்பாய்வு செய்தல். | **1.வரலாற்றைப் புரிந்துகொள்ளுதல்:** வரலாற்றின் பொருள்- வரலாற்றைக் கற்பதன் முக்கியத்துவம் – காலவரிசை - நூற்றாண்டுகள் - பொ.ஆ.மு. (BCE) - பொ.ஆ. (CE).<br>தொல்லியல் சான்றுகள்- தொல்பொருள்கள் – நினைவுச்சின்னங்கள் –நாணயங்கள் - இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுகள். (தகவல் வரைபடங்கள் மூலம்)<br>**இந்தியா மற்றும் தமிழ்நாட்டின் தொல்லியல் தளங்கள்**: ஆதிச்சநல்லூர், பையம்பள்ளி, சிவகளை, கீழடி. (நிலவரைபடங்கள் மற்றும் தகவல் வரைபடங்கள் மூலம்) | **1.இடைக்கால இந்தியா மற்றும் தமிழ்நாட்டின் ஆதாரங்கள்:** முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை ஆதாரங்கள் – தொல்லியல் கண்டுபிடிப்புகள் – நினைவுச்சின்னங்கள் – நாணயங்கள்.<br>**கல்வெட்டியல்:** கல்வெட்டுகள் – செப்புப்பட்டயங்கள்-இலக்கிய ஆதாரங்கள் - வரலாற்றுக் குறிப்புகள் – சமய இலக்கியங்கள் – வெளிநாட்டுப் பயணிகளின் குறிப்புகள். | **1.ஆதாரங்கள்:** ஆவணக்காப்பகப் பதிவுகள், ஓலைச்சுவடிகள் – தமிழ்நாடு ஆவணக் காப்பகம் – இந்திய தேசிய ஆவணக் காப்பகம். |

TNSCERT DRAFT SYLL

| CG 2: **தமிழ்நாட்டில் தொடக்ககால மனிதக் குடியேற்றம் முதல் காலனிய காலம் வரை சமூகத்தின் வளர்ச்சியையும் மாற்றங்களையும் அரசியல், பொருளாதார, பண்பாட்டு முன்னேற்றங்களின் அடிப்படையில் புரிந்துகொள்ளுதல்.** | | | |
|---|---|---|---|
| C.2.1 வேட்டையாடி உணவு சேகரித்து வாழ்ந்த சமூகத்திலிருந்து நிலையான வேளாண்மை சமூகமாக மாறியதே மனித நாகரிகத்தின் அடித்தளமாகும் என்பதை விளக்குதல் | **2. தொடக்ககால மனித வாழ்க்கை, வேளாண்மையின் தொடக்கம் மற்றும் நிலையான வாழ்க்கை:** மனிதர்களின் பரிணாம வளர்ச்சி மற்றும் இடம்பெயர்வு – அறிமுகம் - வேட்டையாடி உணவு சேகரித்தல் - புதிய கற்கால வாழ்க்கை, கால்நடை மேய்த்தல் சார்ந்த சமூகங்கள் - இடமாற்று வேளாண்மை - கற்கருவி தொழில்நுட்பம் - அகழாய்வு செய்யப்பட்ட தளங்கள்: அத்திரம்பாக்கம், பிம்பேட்கா - சக்கரத்தின் கண்டுபிடிப்பு – மண்பாண்டங்கள் - சேமிப்பு முறைகள். | | |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| C.2.2 இடைக்கால இந்தியாவின் அரசியல், நிருவாக முறைகளையும், பொருளாதார வளர்ச்சி மற்றும் பண்பாட்டு முன்னேற்றங்களையும் விளக்குதல். மேலும், முக்கிய அரசுகள் மற்றும் பேரரசுகளின் எழுச்சி மற்றும் வீழ்ச்சியைப் புரிந்துகொள்ளுதல். | | **2. மண்டல அரசுகளுக்கிடையேயான அதிகாரப் போட்டிகளும் பூசல்களும்**:<br>ராஜபுத்திரர்கள் – சௌஹான்கள் – பிரதிகாரர்கள் – பரமாரர்கள் – சோலங்கிகள் – பாலர்கள் – கல்யாணி சாளுக்கியர்கள் – காகதீயர்கள் – ஹொய்சாளர்கள் – யாதவர்கள்.<br>**3. சோழப் பேரரசுகள்: அரசியல், பொருளாதார மற்றும் பண்பாட்டு வளர்ச்சிகள்**:<br>சோழப் பேரரசின் தோற்றம் – அரசியல். ஆட்சி முறை – சபை, ஊர். நாடு– உத்திரமேரூர் கல்வெட்டு– ஆனைமங்கலம் செப்பேடுகள் – நீர்ப்பாசனம் – நில நிருவாகம் – வாரியங்கள் – வரிவிதிப்பு – நாணயங்கள் – கலை மற்றும் கட்டடக்கலை – இலக்கியம் – கடல்சார் வணிக மையங்கள்.<br>**4. அரேபியர்கள் மற்றும் துருக்கியர்களின் வருகை**:<br>டெல்லி சுல்தானியத்தின் தோற்றம் – அரசியல் – நிருவாகம் – கலை மற்றும் கட்டடக்கலை – இலக்கியம் – சோழமண்டல கடற்கரையோரத் தொடக்ககால முஸ்லிம் குடியேற்றங்கள்.<br>**5. பிற்காலப் பாண்டியர்கள்**:<br>பாண்டியப் பேரரசின் தோற்றம் – அரசியல் | |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| | | மற்றும் நிருவாகம் – மாலிக் காஃபூரின் தென்னிந்தியப் படையெடுப்புகள் – மதுரை சுல்தானியம் நிறுவப்படுதல்.<br>**6. விஜயநகர மற்றும் பாமினி அரசுகள்**:<br>விஜயநகரப் பேரரசின் தோற்றம் – அரசியல், சமூக, பொருளாதார மற்றும் பண்பாட்டு நிலைகள் – பாமினி அரசு தோற்றம் – மஹ்மூத் கவான் – நாயங்கார முறை.<br>**7. முகலாயப் பேரரசு: தோற்றமும் வலுப்பெறுதலும்**:<br>பாபர் முதல் ஔரங்கசீப் வரை – முகலாயப் பேரரசின் வீழ்ச்சி.<br>**8. முகலாய நிருவாகம், சமயம் மற்றும் பண்பாடு**:<br>நிலவருவாய் முறை – ஷெர்ஷா சூரி – ராஜா தோடர்மால் – அக்பரின் மன்சப்தாரி முறை – சுல்ஹ்-இ-குல் என்ற சமய சகிப்புத்தன்மைக் கொள்கை – கலை மற்றும் கட்டடக்கலை.<br>**9. மராத்தியர்களின் எழுச்சி**:<br>சிவாஜி – அவரது இராணுவ வெற்றிகளும் நிருவாகமும் – பேஷ்வாக்களின் ஆட்சி – நிருவாகத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் – தஞ்சாவூரில் மராத்தியர் ஆட்சி. | |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| C.2.3 ஐரோப்பியர்களின் வருகைக்கான காரணங்களையும், ஆதிக்கத்திற்காக அவர்கள் மேற்கொண்ட போட்டியால் ஏற்பட்ட மோதல்கள் மற்றும் போர்களின் விளைவுகளையும் பகுப்பாய்வு செய்தல். மேலும், ஆங்கிலேயர்கள் வணிகத்திலிருந்து பெரிய நிலப்பரப்பைக் கைப்பற்றும் நிலைக்கு எவ்வாறு மாறினர் என்பதை விளக்குதல். | | | **2. ஐரோப்பியர்களின் வருகை:** இந்தியாவில் வணிகத்திற்காக அமைக்கப்பட்ட ஐரோப்பியக் குடியேற்றங்கள் – போர்த்துகீசியர்கள் – டச்சுக்காரர்கள் – ஆங்கிலேயர்கள் – டேனியர்கள் – பிரெஞ்சுக்காரர்கள். |

| **CG 3: தொடக்ககால நாகரிகங்கள், மண்டலங்களுக்கு இடையிலான தொடர்புகள், காலனிய ஆட்சியின் தாக்கம் ஆகியவற்றை வரலாற்றுச் சான்றுகளின் அடிப்படையில் புரிந்துகொண்டு, இரும்புக் காலம் முதல் காலனிய ஆட்சியின் தொடக்கம் வரையிலான தமிழ்நாட்டின் வரலாற்றுப் போக்கை விளக்குதல்.** | | | |
|---|---|---|---|
| C.3.1 சிந்துவெளி மற்றும் வேதகாலச் சமூகங்கள் போன்ற தொடக்ககால இந்திய நாகரிகங்களின் சிறப்பம்சங்களை விளக்குதல். குடியிருப்புகள், ஆட்சி, சமூக அமைப்பு, பொருளாதாரம் மற்றும் மண்டலங்களுக்கு இடையிலான தொடர்புகள் எவ்வாறு வளர்ச்சியடைந்தன என்பதைப் பகுப்பாய்வு செய்தல். தமிழ்நாட்டின் தொடக்ககால வரலாற்று அரச மரபுகளையும் விளக்குதல். | **3. சிந்துவெளி நாகரிகம்:** ஹரப்பா மற்றும் மொகஞ்சதாரோ – நகரத் திட்டமிடல் – பெருங்குளம் – கழிவுநீர் வடிகால் அமைப்பு – உலோகவியல் – கைவினைத் தொழில்கள் மற்றும் வணிகம் – சமூக அமைப்பு.<br>**4.வேதகாலம்:** ஆரியர்கள் – குடியேற்றங்கள் மற்றும் வாழ்க்கை முறை – ரிக் வேதகாலம் மற்றும் பிற்கால வேதகாலப் பண்பாடு – தொடக்ககால வேதகாலத்திற்கும் பிற்கால வேதகாலத்திற்கும் இடையிலான வேறுபாடுகள். | | |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| C.3.2 ஆங்கிலேயர்களின் முக்கியப் போர்கள், விரிவாக்கக் கொள்கைகள் மற்றும் நிருவாகச் சீர்திருத்தங்களின் தாக்கத்தைப் பகுப்பாய்வு செய்து, அவை இந்தியச் சமூகத்தில் ஏற்படுத்திய மாற்றங்களை விளக்குதல். | | | **3. இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி நிறுவப்படுதல்:**<br>அறிமுகம் – பிளாசிப் போர் (1757) – பக்சார் போர் (1764) – திவானி உரிமைகள் (1765) – ராபர்ட் கிளைவ் மற்றும் வாரன் ஹேஸ்டிங்ஸ் – 1773ஆம் ஆண்டின் ஒழுங்குமுறைச் சட்டம்.<br>**4. வணிகப் போட்டிகளும் மோதல்களும்:**<br>அறிமுகம் – ஆங்கிலேயர் டச்சுக்காரர்களுக்கு இடையிலான போட்டி – ஆங்கிலேயர் பிரெஞ்சுக்காரர்களுக்கு இடையிலான போட்டி (கர்நாடகப் போர்கள்) – ஆற்காடு நவாப். |

TNSCERT DRAFT SYLLABUS

| CG 4: பண்டைய காலம் முதல் ஆங்கிலேயர் ஆட்சி காலம் வரை தமிழ்நாட்டில் தோன்றிய மண்டல அரசுகளின் எழுச்சி மற்றும் வளர்ச்சி, பண்பாட்டுப் பரிமாற்றங்கள், காலனிய பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் வரலாற்று மாற்றங்கள் ஆகியவற்றைப் புரிந்துகொள்ளுதல். | | | |
|---|---|---|---|
| C.4.1 தொடக்ககால மண்டல அரசுகளின் தோற்றம், நிருவாக முறைகள், நாணய முறை மற்றும் வரிவிதிப்பு முறைகளைப் பகுப்பாய்வு செய்தல். மேலும், தொடக்ககால இந்தியச் சமூகத்தை உருவாக்குவதில் சமணம் மற்றும் பௌத்தமதங்களின் கொள்கைகளையும் அவற்றின் சமூகத் தாக்கத்தையும் விளக்குதல். | **5. அரசுகளின் தோற்றமும் முடியாட்சியில் நிருவாகமும்:** அரசுகளின் உருவாக்கம் – ஜனபதங்கள் மற்றும் மகாஜனபதங்கள் – மகதம் மற்றும் மௌரியர்கள் - மௌரியப் பேரரசின் ஆதாரங்கள் – நிருவாகம் – நாணய முறை மற்றும் வரிவிதிப்பின் அறிமுகம் – அசோகரின் தம்மம் – கல்வெட்டுகள் – கலை மற்றும் கட்டடக்கலை.<br>**6. சமணம், பௌத்தம் மற்றும் ஆசீவகம்:** மகாவீரர் மற்றும் புத்தரின் கொள்கைகள் மற்றும் போதனைகள் – சமூகத் தாக்கம் – தமிழ்நாட்டில் சமணம் மற்றும் பௌத்தமதங்களின் பரவல் – சமணபடுகைகள் மற்றும் கல்வெட்டுகள் – சித்தன்னவாசல் – பௌத்த மையங்கள் – ஆசீவகர்கள். | | |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| C.4.2 ஆங்கிலேயர்களின் நிலவருவாய் முறைகள், நிருவாக மாற்றங்கள் மற்றும் பொருளாதாரக் கொள்கைகளை மதிப்பீடு செய்து, அவை விவசாயிகள், கைவினைஞர்கள் மற்றும் பாரம்பரியத் தொழில்களில் ஏற்படுத்திய தாக்கத்தையும், தொடக்ககால எதிர்ப்புப் போராட்டங்களுக்கான காரணங்களையும் விளக்குதல். | | | **5. ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான எதிர்ப்புகள்:**<br>மைசூர் சுல்தான்கள்: ஹைதர் அலி மற்றும் திப்பு சுல்தான் – ஆங்கிலேய மைசூர் போர்கள் – பாளையக்காரர்களின் கிளர்ச்சி – சென்னை மாகாணத்தில் ஆங்கிலேயர் ஆட்சி நிறுவப்படுதல் – வேலூர் புரட்சி (1806).<br>**6. கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சியில் நிருவாக மாற்றங்கள்:**<br>ஜமீன்தாரி முறை (நிரந்தர நிலவருவாய் முறை) – இரயத்துவாரி முறை – மகல்வாரி முறை – மையப்படுத்தப்பட்ட நிருவாகம் – குடிமைப் பணிகள் – சட்டங்கள், காவல்துறை மற்றும் நீதிமன்றங்கள்.<br>**7. விரிவாக்கக் கொள்கைகள்:**<br>துணைப்படைத் திட்டம் – ஆங்கிலேய மராத்தியப் போர்கள் – வாரிசு இழப்புக் கொள்கை – முக்கிய அரசுகளின் இணைப்பு. |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| **CG 5: பண்டைய காலத்திலிருந்து காலனிய ஆட்சி நிறுவப்படும் காலம் வரை, தமிழ்நாட்டின் அரசியல் அதிகாரம், பண்பாட்டு வாழ்க்கை, கடல்சார் வணிகம் மற்றும் சமூக இயக்கங்களில் ஏற்பட்ட மாற்றங்களையும் தொடர்ச்சிகளையும் புரிந்துகொள்ளுதல்.** | | | |
| C.5.1 தொல்லியல் மற்றும் இலக்கியச் சான்றுகளைப் பகுப்பாய்வு செய்தல், தொடக்ககாலத் தமிழ்நாட்டின் கடல்சார் வணிகம், சமயத் தாக்கங்கள் மற்றும் பண்பாட்டு வளர்ச்சிகளை விளக்குதல். அவை சமூக வாழ்க்கை, அறநெறி மதிப்புகள் மற்றும் அறிவுசார் மரபுகளில் ஏற்படுத்திய தாக்கத்தை மதிப்பீடு செய்தல். | **7. சங்க காலம்: அரசியல், சமூகம் மற்றும் பண்பாடு**<br>தொடக்ககால வரலாற்றுத் தமிழ் அரசுகள் – சேர, சோழ மற்றும் பாண்டியர்கள் – இலக்கியம் – சமூக வாழ்க்கை – வணிகம் – முக்கிய வணிக மையங்கள்: மதுரை, பூம்புகார் (காவிரிப்பூம்பட்டினம்), கொற்கை, முசிறி, உறையூர்: அரிக்கமேடு, அழகன்குளம், கொடுமணல், கீழடி – கடல்சார் வணிகத்தின் மூலம் ஏற்பட்ட பண்பாட்டுப் பரிமாற்றங்கள். | | |
| C.5.2 இடைக்கால சமூக அமைப்புகள், தொழில் சார்ந்த குழுக்கள் மற்றும் பக்தி இயக்கங்களை ஆராய்ந்து, மண்டல அளவிலான அரசுகளின் எழுச்சிகளையும் அவை வழங்கிய பண்பாட்டுப் பங்களிப்புகளையும் விளக்குதல். | | **10. சமயமும் சமூகமும்:**<br>தென்னிந்தியா மற்றும் வடஇந்தியாவில் பக்தி இயக்கங்கள் – சைவம் – வைணவம் – சூஃபி இயக்கம் – சீக்கியம் – இலக்கியம் – சமூகத்தின் மீதான தாக்கம். | |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| C.5.3 காலனிய ஆட்சியின் கீழ் கிராமப்புற வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிராகத் தென்னிந்தியாவில் நடைபெற்ற தொடக்ககால எதிர்ப்புகள் மற்றும் கிளர்ச்சிகளைப் பகுப்பாய்வு செய்தல். | | | **8. காலனிய ஆட்சியின் பொருளாதாரத் தாக்கம்**: வேளாண் அமைப்பில் ஏற்பட்ட மாற்றங்கள் – விவசாயிகளின் மீதான தாக்கம் – கைவினைஞர்கள் – வரி வசூல் மற்றும் நில உரிமை – செல்வச் சுரண்டல் – இந்திய பொருளாதாரத்தின் இழப்பில்ஆங்கிலேய நிறுவனங்களின் வளர்ச்சி – பஞ்சங்கள் மற்றும் இடம்பெயர்வு. |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| CG 6: பண்டைய காலம் முதல் நவீன காலம் வரை ஆட்சி, பொருளாதாரம் மற்றும் சமூக அமைப்புகள்: தமிழ்நாட்டில் காலனிய காலச் சீர்திருத்த இயக்கங்கள், சமூகக் குழுக்கள், சமூகங்களுக்கிடையேயான உறவுகள் ஆகியவற்றை சமூக நீதி வளர்ச்சியை மையமாகக் கொண்டு புரிந்துகொள்ளுதல். | | | |
| C.6.1 பண்டைய இந்தியாவின் நிருவாக அமைப்பு, பொருளாதார அமைப்பு மற்றும் நகரமயமாக்கலைப் பகுப்பாய்வு செய்தல். | **8. மௌரியர்களுக்குப் பிந்தைய காலம்:** குஷாணர்கள் – கனிஷ்கர் – காந்தாரக் கலை – சாதவாகனர்கள் – பொருளாதாரம் – வணிகத் தொடர்புகள் – கைவினைஞர்கள் – வணிகர்கள் – வணிகக் குழுக்கள் – நாணயங்கள் – நகரங்கள் மற்றும் துறைமுகங்களின் வளர்ச்சி. | | |
| C.6.2 ஆட்சி முறைகள் நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் வணிகம், சமூக மற்றும் பண்பாட்டு வாழ்க்கையில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தின என்பதை விளக்குதல். | **9. குப்தர்கள் மற்றும் குப்தர்களுக்குப் பிந்தைய பேரரசுகள்:** அரசு மற்றும் அரசியல் அமைப்பு – நிருவாகம் – பண்பாடு, கலை மற்றும் கட்டடக்கலை – ஹர்ஷவர்த்தனரின் பேரரசு<br>**10. முக்கிய தென்னிந்திய அரசுகளும் மண்டல தொடர்புகளும்:** காஞ்சிப் பல்லவர்கள் – முதலாம் பாண்டிய அரசு – வாதாபி சாளுக்கியர்கள் – தக்காண இராஷ்டிரகூடர்கள் – கலை மற்றும் கட்டடக்கலை. | | |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| C.6.3 தொடக்ககால ஆங்கிலேயர் ஆட்சியில் இந்தியாவின் சமூக நிலைமைகளை விவாதித்து, சமூக ஒடுக்குமுறை மற்றும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை எதிர்கொள்வதிலும், நவீன கல்வியைப் பரப்புவதிலும் கிறித்தவ மதப்பரப்புநர்கள் மற்றும் சமூகச் சீர்திருத்தவாதிகள் ஆற்றிய பங்கை விளக்குதல். இதன் மூலம் ஏற்பட்ட சமூக மாற்றங்களைப் புரிந்துகொள்ளுதல். | | | **9. ஆங்கிலேயர் ஆட்சிக் கால வளர்ச்சிகள்**: நவீனக் கல்வியின் பரவல் – சமயப் பரப்புரையாளர்களின் பங்களிப்புகள் – பள்ளிகள், மருத்துவமனைகள் – நவீன போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு முறைகளின் அறிமுகம் – சமூகச் சீர்திருத்தங்கள். 10. **ஆங்கிலேயர் ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சிகள்** பழங்குடியினர் மற்றும் விவசாயிகளின் கிளர்ச்சிகள் – 1857ஆம் ஆண்டின் மாபெரும் கிளர்ச்சி. |

TNSCERT DRAFT SYLLABUS

## புவியியல்

**கருப்பொருள்: நம்மைச் சுற்றியுள்ள இயற்கை: விண்வெளி, புவி, சுற்றுச்சூழல் மற்றும் உயிரினங்கள்**

**CG 7: புவியின் இயற்கை அமைப்புகள், உயிர்க்கோளம் மற்றும் மனித செயல்பாடுகளுடன் எவ்வாறு ஒன்றோடொன்று தொடர்பு கொள்கின்றன என்பதை மதிப்பீடு செய்தல்**

| திறன்கள் | பாடப்பொருள் | | |
|---|---|---|---|
| | வகுப்பு - 6 | வகுப்பு - 7 | வகுப்பு - 8 |
| C.7.1 சூரியக் குடும்பத்தில் புவியின் அமைவிடம், அதன் உட்புற அடுக்குகள், மேற்பரப்பு நிலத்தோற்றங்கள், புவித்தட்டுகளின் இயக்கங்கள் மற்றும் கண்டங்களின் முக்கிய நில அமைப்பியல் ஆகியவற்றை உள்ளடக்கிய, புவியின் இயற்கை அமைப்பை வடிவமைக்கும் செயல்முறைகளை பகுப்பாய்வு செய்தல். | **1. நமது புவி**<br>அறிமுகம் - பேரண்டத்தின் தோற்றம் - விண்மீன் மண்டலம் - சூரியக் குடும்பம் - கோள்கள், குறுங்கோள்கள், விண்கற்கள் மற்றும் வால்நட்சத்திரங்கள் - புவியின் இயக்கங்கள் மற்றும் அவற்றின் விளைவுகள் – சந்திரன் | **1. புவியின் உட்புற அமைப்பு**<br>அறிமுகம் - புவியின் அடுக்குகள்- அகச்செயல்முறைகள் - மலை உருவாக்கம் - நிலநடுக்கங்கள் - எரிமலைகள் - பாறைச் சுழற்சி | **1. கண்டங்களின் இயற்கை நில அமைப்பியல்**<br>அறிமுகம் - முக்கிய மலைத்தொடர்கள் - முக்கிய பீடபூமிகள் - முக்கிய சமவெளிகள் - முக்கிய ஆறுகள் மற்றும் ஏரிகள் |
| C.7.2 பெருங்கடல்கள், கண்டங்கள், புறச்செயல்முறைகள், மண் அரிப்பு மற்றும் மண் பாதுகாப்பு ஆகியவற்றை விளக்குதல். | **2. பெருங் கடல்களும் கண்டங்களும்**<br>அறிமுகம் - நிலத்தோற்றங்களின் வரிசை - பெருங்கடல்களின் பரவல் - கண்டங்களின் பரவல் | **2. புறச் செயல்முறைகள்**<br>அறிமுகம் - வானிலைச் சிதைவு – நிலத்தோற்ற மாற்றத்திற்கான காரணிகள் - பனியாறு - ஆறு - அலைகள் - காற்று - நிலத்தடி நீர் | **2. மண்**<br>அறிமுகம் - மண் உருவாக்கம் - மண் அடுக்கமைவு - முக்கிய மண் வகைகள் - மண் சீரழிவும் அதன் தாக்கங்களும் – மண் பாதுகாப்பு |

TNSCERT DRAFT SYLL

| | | | |
|---|---|---|---|
| C.7.3 காலநிலை, உயிர்க்கோளம், நீர்க்கோளம் இவற்றுடன் மனித அமைப்புகளுக்கு இடையேயான தொடர்புகளை ஆராய்வதுடன், சூழலமைப்பின் இயக்கவியல், உயிரினப் பல்வகைமை, உயிரினச் சூழலியல் மண்டலங்களை விளக்கி, இந்தியாவின் புவியியல் பன்முகத்தன்மையைப் புரிந்துகொள்ளுதல். | **3. உயிர்க்கோளம்**<br>அறிமுகம் - புவியின் முக்கியக் கோளங்கள் - சூழலமைப்பு - உயிரினப் பல்வகைமை - உயிரினப் பல்வகைமையைப் பாதுகாத்தல் (ஈரநிலங்கள், சதுப்புநிலங்கள்,) | **3. இந்தியாவின் புவியியல் பன்முகத்தன்மை**<br>அறிமுகம் - இந்தியாவின் இயற்கைப் பன்முகத்தன்மை - இந்தியாவின் பண்பாட்டுப் பன்முகத்தன்மை – மண்டல வளர்ச்சி | **3. வானிலை மற்றும் காலநிலை**<br>அறிமுகம் - வளிமண்டலத்தின் கலவை மற்றும் அமைப்பு - வானிலை மற்றும் காலநிலை - வெப்பநிலை - காற்றழுத்தம் - காற்று - ஈரப்பதம் - மேகங்கள் - மழைப்பொழிவு - நீர் சுழற்சி - நீர் சுழற்சியைப் பாதிக்கும் காரணிகள் |

| | | | |
|---|---|---|---|
| **CG 8: வளங்கள், நீர்க்கோளத்தின் பரவல், பயன்பாடு, பாதுகாப்பு ஆகியவற்றைப் பகுப்பாய்வு செய்தல், இடம்பெயர்வு மற்றும் நகரமயமாக்கலின் காரணங்கள், தாக்கங்கள் மற்றும் நிலைத்தன்மை ஆகியவற்றை மதிப்பீடு செய்தல், சிறந்த முடிவை மேற்கொள்ளுதல்** | | | |
| C.8.1 வள ஆதாரங்கள், தொழில்களின் வகைப்பாடு மற்றும் நிலையான வளர்ச்சி ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்புகளைப் பகுப்பாய்வு செய்தல். | **4. வளங்கள்**<br>அறிமுகம் - வளங்களின் ஆதாரங்கள் - வளங்களின் வகைகள் - நிலையான வளர்ச்சி | **4. பொருளாதார வளங்கள்**<br>அறிமுகம் - புதுப்பிக்கத்தக்க மற்றும் புதுப்பிக்க இயலாத வளங்கள் - மரபுசார் மற்றும் மரபுசாரா வளங்கள் - வளங்களின் மேம்பாடு – இயற்கை வளங்கள் குறைதலும் அவற்றைப் பாதுகாத்தலும் | **4. நீர்க்கோளம்**<br>அறிமுகம் - கடலடி நிலத்தோற்றம் - கடல் அலைகள், கடல் ஓதங்கள் மற்றும் கடல் நீரோட்டங்கள் - எல் நினோ மற்றும் லாநினா - கடல் வளங்கள் - பெருங்கடலை ஏன் பாதுகாக்க வேண்டும்? - கடல் மட்டத்தில் ஏற்படும் மாற்றங்கள் |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| | **5. பொருளாதார செயல்பாடுகள்**<br>அறிமுகம் - உழைப்பின் மதிப்பு - முதன்மைத் தொழில்கள் - இரண்டாம் நிலை தொழில்கள் - மூன்றாம் நிலை தொழில்கள் | | **5. இடம்பெயர்தலும் நகரமயமாக்கலும்**<br>அறிமுகம் - இடம்பெயர்தலுக்கான காரணங்கள் - இடம்பெயர்தலின் வகைகள் - நகரமயமாக்கல் - நகரமயமாக்கலின் தாக்கங்கள் – நகர திட்டமிடல் |
| **CG 9: நிலவரைபடத் திறன்கள், மக்கள்தொகை ஆய்வுகள், பொருளாதார நடவடிக்கைகள், சுற்றுலா மற்றும் பேரிடர் முன்னெச்சரிக்கை ஆகியவற்றின் மூலம் புவியியல் புரிதலையும் இடஞ்சார்ந்த சிந்தனையையும் வளர்த்தல்.** | | | |
| C.9.1 உள்ளூர், தேசிய மற்றும் உலகளாவிய நிலைகளில் சுற்றுலாத் தலங்களின் பரவல் மற்றும் முக்கியத்துவத்தைப் பாதிக்கும் புவியியல், பண்பாட்டு மற்றும் வரலாற்றுக் காரணிகளைப் பகுப்பாய்வு செய்தல். | | **5. சுற்றுலா**<br>அறிமுகம் - சுற்றுலாத் தலங்கள் (தமிழ்நாடு, இந்தியா, உலகம்) - பாதுகாப்பு நடவடிக்கைகள் - சூழல் சுற்றுலா | |
| C.9.2 மனிதச் செயல்பாடுகள்,வளர்ச்சி மற்றும் பேரிடர் முன்னெச்சரிக்கையைப் புரிந்துகொள்வதற்குப் புவியியல் அறிவையும் நிலவரைபடத் திறன்களையும் பயன்படுத்துதல். | **6. நிலவரைபடத்தை படித்தறிதல்**<br>அறிமுகம் - நிலவரைபடத்தின் கூறுகள் - அட்சரேகை, தீர்க்கரேகை மற்றும் நேரம் – புவிமாதிரி(Globe) - சுவர் நிலவரைபடங்கள், நிலவரைபடப் புத்தகம் (Atlas) | **6. மக்கள்தொகை**<br>அறிமுகம் - மக்கள்தொகைப் பரவல் மற்றும் அடர்த்தி – மக்கள்தொகைக் கூறுகள் - மக்கள்தொகை வளர்ச்சியும் அதன் தாக்கமும் | **6. பொருளாதார நடவடிக்கைகள்**<br>அறிமுகம் - வேளாண்மை - வேளாண்மையின் வகைகள் - தொழிற்சாலைகள்- தொழிற்சாலைகளின் வகைகள் – வணிகம் மற்றும் போக்குவரத்து |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| | | **7. நிலவரைபடத் திறன்கள்**<br>அறிமுகம் - நிலவரைபடங்களின் வகைகளும் அதன் பயன்பாடுகளும் - அளவைகளின் வகைகள் - நிலவரைபடப்புத்தகத்தினை ஆராய்தல் | **7. பேரிடர்களும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும்**<br>அறிமுகம் - பேரிடர்களின் வகைகள் - காலநிலை மாற்றம் - வெப்ப அலைகள் - நமது முன்னெச்சரிக்கை, எதிர்கொள்ளல் மற்றும் மட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் |
| | | | **8. நிலவரைபடங்கள் மற்றும் பயன்பாடுகள்**<br>அறிமுகம் - இயற்கை நிலவரைபடங்கள் - கருப்பொருள் நில வரைபடங்கள் - நில அளவை வரைபடங்கள் புவி தகவல் அமைப்பின் அடிப்படைகள் |

TNSCERT DRAFT SYLLABUS

| குடிமையியல் கருப்பொருள்: இந்தியாவிலும் தமிழ்நாட்டிலும் மக்களாட்சி, சமூக நீதி மற்றும் உள்ளடக்கிய வளர்ச்சி. | | | |
|---|---|---|---|
| CG 10: இந்தியா மற்றும் தமிழ்நாட்டில் அரசியலமைப்புச் சார்ந்த அமைப்புகள், மனித உரிமை ஆணையங்கள் மற்றும் சட்டங்களின் பங்கை மதிப்பீடு செய்து மக்களாட்சி, வேற்றுமையில் ஒற்றுமை, சமூக நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதற்கான குடிமைப் பங்கேற்பு ஆகியவற்றை வெளிப்படுத்துதல். | | | |
| **திறன்கள்** | **வகுப்பு 6** | **வகுப்பு 7** | **வகுப்பு 8** |
| C.10.1 மொழிகள், கலைகள், தத்துவங்கள், மண்டல அடையாளங்கள் மற்றும் வரலாற்று ரீதியான தொடர்புகள் உள்ளிட்ட இந்தியாவின் பண்பாட்டுப் பன்முகத்தன்மையைப் பகுப்பாய்வு செய்து, அதன் சிறப்பை உணர்ந்து போற்றுதல். | **1. நம்மைச் சுற்றியுள்ள பன்முகத்தன்மையைப் புரிந்துகொள்ளுதல்:** பன்முகத்தன்மையின் பொருள் - அன்றாட வாழ்வில் காணப்படும் எடுத்துக்காட்டுகள் - வேற்றுமையில் ஒற்றுமை - இந்திய மொழிகள் - இந்தியக் கலை மற்றும் பண்பாடு - நல்லிணக்கத்துடன் இணைந்து வாழ்தல் | **1. பன்முகத்தன்மையும் மக்களாட்சியும்:** பன்முகத்தன்மை மக்களாட்சியை எவ்வாறு வலுப்படுத்துகிறது - தேசிய ஒற்றுமையை மேம்படுத்துவதில் கல்வியின் பங்கு - தேசியப் பண்பாட்டிற்கு மாநிலங்களின் பங்களிப்பு<br>**2. பொருளாதார நிறுவனங்களும் வாழ்வாதார அமைப்புகளும்:** பொது விநியோக முறை (PDS) - உள்ளூர் சந்தைகள்: தினசரி, வாராந்திர மற்றும் மாதாந்திர சந்தைகள் - கூட்டுறவுச் சங்கங்கள்: விவசாயிகள் - பால் உற்பத்தியாளர்கள் - கைவினைஞர்கள் - குடிசைத் தொழில்கள் - அமைப்புசாரா துறைகள். | **1. சமூக மற்றும் தேசிய ஒருங்கிணைப்பு:** சமூக நல்லிணக்கம் - சமூகத்தில் அமைதியுடனும் ஒருவருக்கொருவர் மரியாதையுடனும் இணைந்து வாழ்தல் - இந்தியாவில் சமூக ஒருங்கிணைப்பை மேம்படுத்துவதற்கான முக்கிய அரசியலமைப்பு விதிகள் - தேசிய ஒருங்கிணைப்பு - சமத்துவம் மற்றும் சமநீதி - குடிமக்களிடையே பாதுகாப்பு உணர்வும் ஒற்றுமை உணர்வும் |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| C.10.2 இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகள், விழுமியங்கள், அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள், அரசாங்கத்தின் அமைப்பு ஆகியவற்றை விளக்குதல். இந்தியாவில் மக்களாட்சி எவ்வாறு செயல்படுகிறது? என்பதை விளக்குவதுடன், மக்களாட்சியை வலுப்படுத்துவதில் நிறுவனங்கள், ஊடகங்கள் மற்றும் குடிமக்களின் பங்கேற்பை பகுப்பாய்வு செய்தல். | **2. அரசியலமைப்பின் தேவையும் கருத்தாக்கமும்**:<br>அரசியலமைப்பு - தேவை - வகைகள் - அதன் முக்கியத்துவம் - இந்திய அரசியலமைப்பும் அதன் விழுமியங்களும்: நோக்கங்கள் - இந்திய அரசியலமைப்பை உருவாக்குதல் மற்றும் அதன் ஆதாரங்கள் | **3. இந்திய அரசியலமைப்பு**:<br>அறிமுகம் - முகவுரை - சிறப்பு அம்சங்கள் - அரசியலமைப்புத் திருத்தம் - இந்திய மக்களாட்சியும் அதன் அமைப்புகளும்: ஆட்சி மற்றும் அரசியல் கட்சியில் மக்களின் பங்களிப்பு - இந்தியத் தேர்தல் ஆணையம் - மாநிலத் தேர்தல் ஆணையம் - பள்ளிகளில் மக்களாட்சி - இளைஞர் நாடாளுமன்றம். | **2. அரசாங்கத்தின் அமைப்பு**:<br>நிருவாகத்துறை, சட்டமன்றம் மற்றும் நீதித்துறையின் அமைப்பு, பங்கு மற்றும் முக்கியத்துவம் இந்திய நீதித்துறை: ஒருங்கிணைந்த நீதித்துறை - இந்திய நீதித்துறையின் கட்டமைப்பு, பங்கு, அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகள்.<br>**3. ஊடகம் மற்றும் மக்களாட்சி**:<br>ஊடகம் மற்றும் விழிப்புணர்வுமிக்க குடிமக்கள் |
| C.10.3 இந்தியாவில் குடியுரிமை என்ற கருத்தை விளக்குவதுடன், தேசிய ஒற்றுமை, சமூக நல்லிணக்கம் மற்றும் பன்முகத்தன்மைக்கான மரியாதையை மேம்படுத்தும் வகையில் பொறுப்புணர்வுடன் கூடிய குடிமைப் பண்பாட்டை வெளிப்படுத்துதல். | **3. குடியுரிமை**:<br>குடியுரிமையின் பொருள் - சமூக வாழ்வில் குடிமக்களின் பங்கு - குடிமைப் பொறுப்பு - இந்திய அரசியலமைப்பின் விழுமியங்களை நிலைநிறுத்துதல் | 4. குடிமைப் பண்பாடு:<br>பொது வளங்களைப் பொறுப்புடன் பயன்படுத்துதல் மற்றும் சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல்.<br>குடிமை உணர்வு: குடும்பம், சமூகம் மற்றும் பொது நிறுவனங்களின் பங்கு - பொறுப்புணர்வுடன் கூடிய இணையவழி நன்னடத்தை - வரி செலுத்துவதில் பொறுப்புணர்வு | **4. இந்தியக் குடியுரிமை**:<br>இந்தியாவில் குடியுரிமையைப் பெறுவதற்கான வழிமுறைகள் –அயல்நாடு வாழ் இந்தியர் (NRI) - இந்திய வம்சாவளியினர் (PIO) |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| C.10.4 சமூக நீதியை மேம்படுத்துவதிலும், சமூகத்தில் பின்தங்கிய பிரிவினரின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதிலும் அரசின் நலத்திட்டங்கள் மற்றும் வளர்ச்சித் திட்டங்களின் பங்கை மதிப்பீடு செய்தல். | **4. மக்கள் நல அரசு:**<br>பொருள் மற்றும் வரையறை - தமிழ்நாட்டில் சமூக மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் | **5. தமிழ்நாட்டில் சமூக நலனை மேம்படுத்துதல்:**<br>சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் வழிமுறைகள்: வறுமை, வேலையின்மை, குழந்தைத் தொழிலாளர் முறை, வரதட்சணை, குடும்ப வன்முறை மற்றும் பள்ளிப்படிப்பை இடைநிறுத்துதல் - சமூக ஊடகங்களின் தாக்கம் - போதைப்பொருள் பயன்பாடு | **5. தமிழ்நாட்டில் சமூக நலத்திட்டங்கள்:**<br>மாவட்ட சமூக நலத்துறை – தமிழ்நாட்டில் நலத்திட்டங்கள் (சுகாதாரம் மற்றும் குடும்பநலன், குழந்தைகள், இளைஞர்கள், பெண்கள், மூத்த குடிமக்கள், மூன்றாம் பாலினத்தவர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் )<br>**6. உரிமைகளைப் பாதுகாப்பதற்கான அமைப்புகள்:**<br>மனித உரிமைகள் ஆணையம்- நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1996 - குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம், 2005 – தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 - இலவச மற்றும் கட்டாயக் கல்விக்கான உரிமைச் சட்டம், 2009 - போக்சோ சட்டம் (POCSO Act 2012) |

TNSCERT DRAFT SYLLABUS

| | | | |
|---|---|---|---|
| C.10.5 கிராமம், மாவட்டம் மற்றும் மாநில அளவிலான ஆட்சி அமைப்புகளின் கட்டமைப்பு மற்றும் செயல்பாடுகள் ஆகியவற்றை விளக்கி, நிருவாகம், வளர்ச்சி, குடிமக்களின் உரிமைகள், முதலானவற்றைப் பாதுகாப்பதில் நிறுவனங்கள், அலுவலர்கள் மற்றும் குடிமக்களின் பங்கேற்பினைப் பகுப்பாய்வு செய்தல். | **5. உள்ளாட்சி அமைப்பும் சமூகப் பங்கேற்பும்:**<br>ஊரக உள்ளாட்சி: கிராம ஊராட்சி (கிராம சபை) - ஊராட்சி ஒன்றியம் - மாவட்ட ஊராட்சி<br>நகர்ப்புற உள்ளாட்சி: பேரூராட்சி - நகராட்சி – மாநகராட்சி | **6. உள்ளாட்சி அமைப்பின் நிருவாகக் கட்டமைப்பு:**<br>கிராம நிருவாகம் - வட்டார நிருவாகம் - மாவட்ட நிருவாகம் -<br>அண்மைக்கால முன்னெடுப்புகள்: மின் ஆளுகை | |
| C.10.6 சாலைப் பாதுகாப்பு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவதிலும், அவற்றை மேம்படுத்துவதிலும் பல்வேறு அமைப்புசார்ந்த நிறுவனங்கள் மற்றும் சமூக அமைப்புகளின் பங்கை மதிப்பீடு செய்தல். | **6. அடிப்படை சாலைப் பாதுகாப்பு விதிகள்:**<br>ஓட்டுநர் உரிமம் - அதன் முக்கியத்துவம் - வேக வரம்பு - சாலைகளின் வகைகள் - போக்குவரத்து விதிகள் - சாலைப் பாதுகாப்பு - பள்ளி அளவிலான சாலைப் பாதுகாப்புக் குழுக்கள் | **7. போக்குவரத்து விதிமுறைகளும் விபத்துகளுக்கான காரணங்களும்:**<br>சாலைப் பாதுகாப்பில் குடிமக்களின் பொறுப்புகள் - போக்குவரத்துக் காவலரின் பங்கு -<br>விபத்துகளுக்கான காரணங்கள் - சாலைப் பாதுகாப்பில் சமூகத்தின் பொறுப்பு | **7. சாலைப் பாதுகாப்புச் சட்டங்களும் அமலாக்க அமைப்புகளும்:**<br>சாலைப் பாதுகாப்புச் சட்டங்கள் - மோட்டார் வாகனச் சட்டம் 1988 - போக்குவரத்து விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகள் - சாலை விதிகளைப் பின்பற்றுவதில் குடிமக்களின் பொறுப்பு |

TNSCERT DRAFT SYLLABUS

| **பொருளியல்**<br>**கருப்பொருள் : அன்றாடப் பொருளாதாரம்** | | | |
|---|---|---|---|
| **CG 11: அன்றாட வாழ்க்கையில் பொறுப்பான நுகர்வு, வரவு-செலவுத் திட்டமிடல் மற்றும் நிதி சார்ந்த அறிவாற்றல் ஆகியவற்றை விளக்குதல்.** | | | |
| C.11.1 அடிப்படை குடும்ப நுகர்வு, குடும்ப வரவு-செலவுத் திட்டமிடல், வங்கிச் சேவைகள் மற்றும் பாதுகாப்பான மின்னணுப் பரிவர்த்தனைகள் தொடர்பான கருத்துகளை விளக்குதல். | **1. குடும்ப நுகர்வு**<br>தேவைகள், விருப்பங்கள் மற்றும் தேர்வுகள் - குடும்ப நுகர்வு - பொறுப்பான நுகர்வு - மறுசுழற்சி மற்றும் மறுபயன்பாடு | **1. குடும்ப வரவு-செலவுத் திட்டமிடல்**<br>பணத்தின் செயல்பாடுகள் - பணத்தின் வடிவங்கள் - நாணயங்கள்: உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாணயங்கள் - குடும்ப வருமானம் - குடும்பச் செலவினம் - குடும்ப வரவு -செலவுத் திட்டமிடல் - சேமிப்புப் பழக்கங்கள் | **1. அன்றாட நிதி நடவடிக்கைகள்**<br>வங்கிகள் - சேமிப்பு மற்றும் வைப்புகள் - வங்கிக் கணக்குகள் - UPI, QR குறியீடுகள் மற்றும் அலைப்பேசி வங்கி சேவைகள் - கடன்கள், கடனுக்கான வட்டி - இணையவழிப் பாதுகாப்பு(Online Safety) மற்றும் இணையப் பாதுகாப்பு(Cyber Security) - மோசடி குறித்த விழிப்புணர்வு - நுகர்வோர் குறைதீர் வழிமுறைகள் - சுய உதவிக் குழுக்கள் |

TNSCERT DRAFT SYLLABUS

| CG 12: சந்தைகள், உற்பத்தி, முதலீடு மற்றும் அரசின் தலையீடு தொடர்பான அன்றாட வாழ்க்கைச் சூழல்களைப் புரிந்துகொள்வதற்கும், பொருளாதார முடிவுகளை மேற்கொள்வதற்கும் பொருளாதாரக் கருத்துகளைப் பயன்படுத்துதல். | | | |
|---|---|---|---|
| C.12.1 சந்தை, உற்பத்தி, முதலீடு, வரிவிதிப்பு மற்றும் அரசின் பொதுச் செலவினம் பற்றிய பொருளாதாரக் கருத்துகளைப் பயன்படுத்தி, பொருளாதாரச் சிக்கல்களுக்குத் தீர்வு காணவும், சரியான முடிவுகளை எடுக்கவும் உதவுதல். | **2. அன்றாட சந்தை**<br>உள்ளூர் சந்தைகள் - வாங்குவோர் மற்றும் விற்போர் – பொருள்களின் மதிப்பும் விலையும் - பொதுப் பயன்பாட்டுபொருள்கள் – குடும்பத் தேவைக்கான கொள்முதல் | **2. நம்மைச்சுற்றியுள்ள உற்பத்தி அமைப்புகள்**<br>வேளாண்மை, தொழில் மற்றும் சேவைத் துறைகளில் உள்ளூர் உற்பத்தி - உற்பத்திக்கும் குடும்பத்திற்கும் இடையேயான தொடர்பு - உற்பத்திக் காரணிகள் - உற்பத்திச் செயல்முறை - மதிப்புக் கூட்டல் - தொழில்நுட்பம் மற்றும் மனிதவளத்தின் பங்கு - நிலையான உற்பத்தி - மொத்த விற்பனை, சில்லறை விற்பனை மற்றும் இணையவழிச் சந்தைகள் - சர்வதேசச் சந்தைகள் | **2. சேமிப்பும் முதலீடும்**<br>முதலீடுகள் - முறையான முதலீட்டுத் திட்டங்கள் (SIPs) - பங்குகள் - பத்திரங்கள் – சந்தைகள் மற்றும் நிதி அமைப்புகளில் அரசின் பங்கு - அரசின் வரிவிதிப்பு - அரசின் பொதுமுதலீடுகள் மற்றும் பொதுச் செலவினங்கள் |

| கலை, வாழ்வியல் திறன்கள் மற்றும் விழுமியங்களின் ஒருங்கிணைப்பு | |
|---|---|
| **கலை ஒருங்கிணைப்பு (6–8ஆம் வகுப்புகள்)** | 1. இடங்கள் சார்ந்த புரிதலுக்காக வரைதல், வரைவோவியம் மற்றும் நிலவரைபடங்களைப் பயன்படுத்துதல்.<br>2. காலவரிசைகள், சுவரொட்டிகள், விளக்கப்படங்கள் மற்றும் தகவல் வரைபடங்கள் ஆகியவற்றை உருவாக்குதல்.<br>3. வரலாறு மற்றும் குடிமையியல் கருத்துகளைப் புரிந்துகொள்ள பாத்திரமேற்று நடித்தல், நாடகமாக்கல் மற்றும் கதைசொல்லல் போன்றவற்றை பயன்படுத்துதல்.<br>4. நாட்டுப்புறக் கலைகள், உள்ளூர் கைவினைப் பொருள்கள் மற்றும் பண்பாட்டு வெளிப்பாடுகளை ஒருங்கிணைத்தல்.<br>5. சமூகக் கருத்துகளை வெளிப்படுத்த இசை, கவிதை மற்றும் முழக்கங்களைப் பயன்படுத்துதல்.<br>6. நிலத்தோற்றங்கள், நினைவுச்சின்னங்கள் மற்றும் நிறுவனங்களின் மாதிரிகளை உருவாக்குதல். |

TNSCERT DRAFT SYLLABUS

| | |
|---|---|
| | 7. காட்சிப்படுத்தல்கள் மற்றும் கண்காட்சிகளை ஊக்குவித்தல்.<br>8. கலைகளைப் பாரம்பரியம், பண்பாடு மற்றும் அடையாளத்துடன் இணைத்தல்.<br>9. கருத்துகளை வெளிப்படுத்தும் ஒரு வழியாக படைப்பாற்றலை வளர்த்தல். |
| **வாழ்வியல் திறன்களை ஒருங்கிணைத்தல் (6–8ஆம் வகுப்புகளுக்குப் பொதுவானது)** | 1. கலந்துரையாடல் மூலம் திறனாய்வுச் சிந்தனை மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனையை வளர்த்தல்.<br>2. குழுச் செயல்பாடுகள் மூலம் தகவல்தொடர்பு மற்றும் இணைந்து செயல்படும் திறன்களை வளர்த்தல்.<br>3. சமூகச் சூழல்களைப் பயன்படுத்தி சிக்கல்களுக்குத் தீர்வுகாணும் மற்றும் முடிவெடுக்கும் திறன்களை வளர்த்தல்.<br>4. வரலாற்று மற்றும் குடிமையியல் கருப்பொருள்கள் மூலம் பிறர் உணர்வுகளைப் புரிந்து கொள்ளும் திறனையும் சமூக விழிப்புணர்வையும் வளர்த்தல்.<br>5. பொறுப்புணர்வு மற்றும் குடிமைப் பண்புகளை வலுப்படுத்துதல்.<br>6. செயல்திட்டச் செயல்பாடுகள் மூலம் தலைமைத்துவம் மற்றும் குழுப்பணித் திறன்களை வளர்த்தல்.<br>7. நேர மேலாண்மை மற்றும் திட்டமிடல் திறன்களை வளர்த்தல்.<br>8. அறநெறிச் சிந்தனை மற்றும் விழுமியங்களின் அடிப்படையில் முடிவெடுக்கும் திறனை ஊக்குவித்தல்.<br>9. சுய விழிப்புணர்வையும் சிந்தித்து வெளிப்படுத்தும் திறனையும் வளர்த்தல். |
| **விழுமியங்களை ஒருங்கிணைத்தல் (6–8ஆம் வகுப்புகளுக்குப் பொதுவானது).** | 1. சமூகப் பொறுப்புள்ள குடிமகனாகத் திகழ்வதற்குத் தேவையான விழுமியங்களை வளர்த்தல்.<br>2. சமத்துவம், நீதி மற்றும் சுதந்திரம் போன்ற அரசியலமைப்பு விழுமியங்களை மேம்படுத்துதல்.<br>3. பன்முகத்தன்மை, பன்மைத்துவம் மற்றும் பண்பாட்டுப் பாரம்பரியத்தை மதித்தல்.<br>4. சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு மற்றும் நீடித்து நிலைத்திருக்கும் தன்மை குறித்த விழிப்புணர்வை வளர்த்தல்.<br>5. குடிமக்களுக்கான விழுமியங்களையும் பங்கேற்பு குடியுரிமையையும் ஊக்குவித்தல்.<br>6. உலகளாவிய கண்ணோட்டத்துடன் தேசிய ஒருமைப்பாட்டை வளர்த்தல்.<br>7. அறநெறி சார்ந்த நடத்தை, நேர்மை மற்றும் சமூகப் பொறுப்புணர்வு ஆகியவற்றிற்கு முக்கியத்தும் அளித்தல்.<br>8. பாலினச் சமத்துவம் மற்றும் சமூக உள்ளடக்கம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.<br>9. அமைதி, ஒத்துழைப்பு மற்றும் ஒருவருக்கொருவர் மரியாதை அளித்தல் ஆகியவற்றைப் போற்றுதல்.<br>10. செயல்திறன்மிக்க மற்றும் விழிப்புணர்வுள்ள குடிமைப்பண்பை ஊக்குவித்தல். |

TNSCERT DRAFT SYLLABUS

| |
|---|
| **கற்பித்தல் செயல்முறை (6-8 ஆம் வகுப்புகளுக்குப் பொதுவானது)**<br>1. வழிகாட்டும் வினாக்கள், காட்சிப்படங்கள் மற்றும் மூலப்பொருள்களைப் பயன்படுத்தி வினா எழுப்பும் திறனை வளர்த்தல்.<br>2. நிலவரைபடங்கள், காலவரிசைகள், விளக்கப்படங்கள் மற்றும் வரைபடச் சித்திரங்களை முக்கியக் கற்றல் கருவிகளாகப் பயன்படுத்துதல்.<br>3. சக மாணவர்களிடையேயான கற்றலை மேம்படுத்த, சிந்தித்தல், இணைந்து கற்றல், பகிர்ந்து கொள்ளுதல் மற்றும் குழுக் கலந்துரையாடல்கள் ஆகியவற்றைப் பயன்படுத்துதல்.<br>4. நேரடியாகக் காணமுடியாத கருத்தியல் கருத்துகளை எளிதாகப் புரிந்துகொள்ளச் சிறு நிகழ்வாய்வுகள் மற்றும் அன்றாட வாழ்க்கை எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்துதல்.<br>5. மாணவர்களின் சுற்றுப்புறச் சூழலுடன் தொடர்புடைய செயல்திட்ட அடிப்படையிலான மற்றும் அனுபவக் கற்றலை ஊக்குவித்தல்.<br>6. குறிப்பாக வரலாறு மற்றும் குடிமையியல் பாடங்களில் கதைசொல்லல் மற்றும் கதை வடிவ விளக்கங்களை ஒருங்கிணைத்தல்.<br>7. ஒப்பீட்டுச் சிந்தனையை ஊக்குவித்தல் (கடந்த காலம்–நிகழ்காலம், உள்ளூர்–தேசிய–உலகளாவிய).<br>8. சாத்தியமான இடங்களில் தகவல் மற்றும் தொடர்புத் தொழில்நுட்பக் (ICT) கருவிகள் மற்றும் மின்னுரு வளங்களைப் பயன்படுத்துதல்.<br>9. குறிப்பிட்ட கால இடைவெளிகளில் சுயசிந்தனைச் செயல்பாடுகளை மேற்கொள்ளுதல் (நாட்குறிப்புகள், கற்றல் நிறைவுக் குறிப்புகள், கருத்துச் சுருக்கங்கள்). |
| **மதிப்பீட்டு உத்திகள் (6-8ஆம் வகுப்புகளுக்குப் பொதுவானது)**<br>1. வளரறி மற்றும் தொகுத்தறி மதிப்பீட்டு முறைகளை ஒருங்கிணைத்துப் பயன்படுத்துதல்.<br>2. மனப்பாடத்தை மட்டும் மதிப்பிடாமல், திறன்சார் வினாக்களைப் பயன்படுத்துதல்.<br>3. நிலவரைபடப் பணி, ஆதார அடிப்படையிலான வினாக்கள் மற்றும் தரவுப் பகுப்பாய்வு ஆகியவற்றை உள்ளடக்குதல்.<br>4. செயல்திட்டப்பணிகள், விளக்கக்காட்சிகள், சுவரொட்டிகள் மற்றும் மாதிரிகள் மூலம் மதிப்பீடு செய்தல்.<br>5. குறுகிய வாய்மொழி மதிப்பீடுகள் மற்றும் சக மாணவர் மதிப்பீட்டிற்கான வாய்ப்புகளை வழங்குதல்.<br>6. பகுத்தறிதல், தகவல்தொடர்பு மற்றும் ஒத்துழைப்பு போன்ற திறன்களை மதிப்பிடுவதற்கு மதிப்பீட்டு தரநிலைகள் / மதிப்பீட்டு கூறுகள் பயன்படுத்துதல்.<br>7. குறிப்பிட்ட கால இடைவெளிகளில் மாணவர்கள் சுயமதிப்பீடு மற்றும் மீள்பார்வை செய்தல்.<br>8. கற்ற கருத்துகளை அன்றாட வாழ்க்கைச் சூழல்களுடன் தொடர்புபடுத்தும் பயன்பாட்டு அடிப்படையிலான வினாக்களைப் பயன்படுத்துதல்.<br>9. பாடப்பொருளை நிறைவு செய்வதை மட்டும் அடிப்படையாகக் கொள்ளாமல், கற்றல் விளைவுகளுடன் மதிப்பீட்டை இணைத்தல். |

TNSCERT DRAFT SYLLABUS